**நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர்: ஸ்ரேயா பி சிங், இ.ஆ.ப.,**

**ந.க.எண்.4418/2020/பே2,** **நாள்.15.12.2021**

**பொருள்:** பணியாளர்குழு – பேரூராட்சிகள் நிர்வாகம் – நாமக்கல் மாவட்டம் – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – 2018–19 மற்றும் 2019–20 – இளநிலை உதவியாளர் உள்ளடக்கிய தொகுதி IV பணியிடங்களில் தெரிவு செய்யப்பட்ட பணியாளர்கள் நாமக்கல் மாவட்ட பேரூராட்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிபுரிந்து வருவது – பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

**பார்வை:**
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களது கடிதம் எண்.2481/PSD–I/2020, நாள்.26.05.2020.
2. நாமக்கல் மாவட்டஆட்சித் தலைவரின் செயல்முறைகள் ந.க.எண்.4418/2020/பே2, நாள்.12.08.2020.
3. தொடர்புடைய பேரூராட்சிகளின் செயல் அலுவலரிடமிருந்து வரப்பெற்ற கருத்துருக்கள்.
4. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் சார் செயலாளர் கடிதம் எண்.2481/PSD-C2/2020, நாள்.14.03.2021.
5. தொடர்புடைய ஆவணங்கள்.

******

**ஆணை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக இளநிலை உதவியாளர் பணியிடத்தினை உள்ளடக்கிய தொகுதி IVல் அடங்கிய தமிழ்நாடு அமைச்சு பணியிடங்களுக்கு, 2018–19 மற்றும் 2019–20ஆம் ஆண்டிற்கான காலியிடங்களுக்கு நடத்தப்பட்ட தேர்வில் தேர்ச்சி பெற்று, பார்வை 1–இல் கண்டுள்ள சென்னை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய, செயலாளரின் கடிதத்தின் மூலம் நாமக்கல் மாவட்ட பேரூராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 2–இல் காணும் நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகளின்படி, கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு 7 (ஏழு) பணியாளர்களுக்கும் பணியிடம் வழங்கப்பட்டு, அதன் எதிரே குறிப்பிட்டுள்ள தேதி முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்கள்.

**அட்டவணை – 1**

| வ. எண் | பணியாளர்களின் பெயர் மற்றும் பதவி (திருவாளர்கள்) | பணி நியமனம் செய்யப்பட்ட பேரூராட்சியின் பெயர் | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 1 | சங்கீதா. ஆர்<br>இளநிலை உதவியாளர் | ஆர்.புதுப்பட்டி | 23.09.2020 மு.ப. |
| 2 | பிரீத்திகா. எம்<br>இளநிலை உதவியாளர் | நாமகிரிப்பேட்டை | 17.08.2020 மு.ப. |
| 3 | மோகனப்ரியா. வி<br>இளநிலை உதவியாளர் | வேலூர் | 17.08.2020 மு.ப. |
| 4 | ஜீவா . ஆர்<br>இளநிலை உதவியாளர் | பாண்டமங்கலம் | 21.08.2020 மு.ப. |

| | | | |
|---|---|---|---|
| 5 | வித்யா. பி<br>இளநிலை உதவியாளர் | பிள்ளாநல்லூர் | 14.08.2020 மு.ப. |
| 6 | சிவராஜ் .சி<br>வரித்தண்டலர் | சீராப்பள்ளி | 28.08.2020 மு.ப. |
| 7 | ராஜா கண்ணன். பி<br>வரித்தண்டலர் | ஆலாம்பாளையம் | 21.08.2020 மு.ப. |

இந்நிலையில் வரிசை எண்.6ல் கண்ட திரு.சி.சிவராஜ், வரித்தண்டலர் என்பவர் பணி நியமனத்தின் போது சமர்ப்பித்த சாதி சான்றிதழின் மெய்த்தன்மையானது உறுதி செய்யப்படாததால் அவர் தம் நியமனத்தின் போது நிபந்தனையின் அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளதால் அவர் தம் சாதி மெய்த்தன்மை குறித்த அறிக்கை இது நாள் வரை கிடைக்க பெறவில்லை என்பதால் அவரது பணியினை மட்டும் மேற்காண் மெய் தன்மை சான்று கிடைக்கப் பெற்ற பின்னர் வரன்முறை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர்தேர்வாணையம் வழியாக தேர்வு செய்து பணியமர்த்தப்பட்ட அட்டவணை 2ல் கண்டுள்ள 6 (ஆறு) பணியாளர்களின் பணியினை மட்டும் அவர்தம் பணியில் சேர்ந்த நாள் முதல் அதன் கீழ்குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து இதன் வாயிலாக ஆணையிடப்படுகிறது.

**<u>அட்டவணை – 2</u>**

| வ.எண் | பணியாளர்களின் பெயர் மற்றும் பதவி (திருவாளர்கள்) | பணி நியமனம் செய்யப்பட்ட பேரூராட்சியின் பெயர் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | சங்கீதா. ஆர்<br>இளநிலை உதவியாளர் | ஆர்.புதுப்பட்டி | 23.09.2020 மு.ப. | 23.09.2020 மு.ப. |
| 2 | பிரீத்திகா. எம்<br>இளநிலை உதவியாளர் | நாமகிரிப்பேட்டை | 17.08.2020 மு.ப. | 17.08.2020 மு.ப. |
| 3 | மோகனப்ரியா. வி<br>இளநிலை உதவியாளர் | வேலூர் | 17.08.2020 மு.ப. | 17.08.2020 மு.ப. |
| 4 | ஜீவா .ஆர்<br>இளநிலை உதவியாளர் | பாண்டமங்கலம் | 21.08.2020 மு.ப. | 21.08.2020 மு.ப. |
| 5 | வித்யா .பி<br>இளநிலை உதவியாளர் | பிள்ளாநல்லூர் | 14.08.2020 மு.ப. | 14.08.2020 மு.ப. |
| 6 | ராஜா கண்ணன் .பி<br>வரித்தண்டலர் | ஆலாம்பாளையம் | 21.08.2020 மு.ப. | 21.08.2020 மு.ப. |

<u>நிபந்தணை</u>

**" The Regularization Is Subject To The Outcome Of The Wps Pending on The Files Of The Hon'ble High Court Of Madras/Madurai Bench Of The Hon'ble High Court Of Madras Relating To The Recruitment To The Post Included In Combined Civil Services Examination – IV For The Year 2018-2019 and 2019-2020".**

மேலும் தனியர்களின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவினை மேற்கொண்டு அதன் விபரத்தினை இவ்வலுவலகத்திற்கு சமர்ப்பிக்குமாறு சம்மந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலருக்கு இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

**மாவட்ட ஆட்சித் தலைவருக்காக,**
**நாமக்கல்.**

**பெறுநர்**
தொடர்புடைய இளநிலை உதவியாளர்கள் மற்றும் வரித்தண்டலர்கள்,
(சம்மந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர் வழியாக)

**நகல்:**

1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–2 தகவலுக்காக
2. பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக
3. உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை, நாமக்கல் மாவட்டம்.
4. செயல் அலுவலர், ஆர்.புதுப்பட்டி,நாமகிரிப்பேட்டை,வேலூர், பாண்டமங்கலம், பிள்ளாநல்லூர், சீராப்பள்ளி , மற்றும் ஆலாம்பாளையம் பேரூராட்சிகள்,